1977 ஜூலை 12]

### 3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் அறிவிக்கப்படாதது குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். விதிமுறைகளிலே

Rule 6 (1).—At the commencement of every session or from time to time, as the case may be, the Speaker may nominate from amongst the members of the Assembly a panel of not more than six Chairmen.

என்று இருக்கிறது. இந்த செஷன் ஆரம்பித்து பல நாட்கள் ஆகின்றன. மாண்புமிகு அவைத் தலைவரவர்களால் 'பேனல் ஆஃப் சேர்மன்' இதுவரை நியமிக்கப்படவில்லை. இதற்கான விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரிசிலனையில் இருக்கிறது. விரைவில் நியமிக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

### 4. தகவல் கோரல்.

### மாயூரத்தில் நடைபெற்ற பேருந்து விபத்துபற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து

திரு. என். கிட்டப்பா : பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், சார். மாண்புமிகு முதல்வரவர்கள் மாயூரத்திலே நடைபெற்ற பேருந்து விபத்திலே சிக்கிய நான்கு பேர்களுக்கு தலைக்கு ஆயிரம் ரூபாய் வழங்கியிருப்பதைச் செய்தித்தாள்களின் வாயிலாக அறிந்தேன். அதற்காகத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். 9—7—1977 ஆம் தேதியன்று சோழன் போக்கு வரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்து விபத்துக்குள்ளாகி 10 பேர்களுக்கு மேல் இறந்திருப்பதாக நம்பத் தகுந்த முறையில் செய்தி கிடைத்திருக்கிறது. எனவே மீதிப் பேர்களுக்கும் அத்தகைய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த அடிப்படையில் இது பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் ஆகும்? ஏதாவது பேசியிருந்தால் அதற்குமேல்தான் இன்பர்மேஷன் கேட்பார்கள். விவாதம் ஏதேனும் நடந்து இன்பர்மேஷன் தேவை என்றால்தானே இன்பர் மேஷன் கேட்க முடியும்? எடுத்தவுடனேயே இன்பர்மேஷன் என்று கேட்டால் பதில் சொல்ல அமைச்சர் தயாராக இருக்க வேண்டாமா? நடக்கின்ற விவாதத்திலே உறுப்பினர்கள் பேசுவதிலே சந்தேகம் ஏதாவது இருந்தால் பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் கேட்கலாமே தவிர எடுத்தவுடனேயே இப்படிக்

கேட்கலாமா? உங்களுக்கு வேண்டுமானால் இப்பொழுது அனுமதித்துவிடுகிறேன். மறுபடியும் இதைப்போலக் கேட்காதீர்கள்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, ஒரு பேருந்து விபத்தில் 10 பேர்கள் இறக்கக்கூடிய சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இன்னும் நான்கைந்து பேர்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள், மன்னிக்க வேண்டும், விபத்திலே. இதை ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வர வேண்டும் என்று கொடுத்த நேரத்தில் இன்று அன்றாட அலுவலின் கீழ் வருகிறது என்று தள்ளிவிடப்பட்டிருக்கிறது. ஒருவேளை நாள் ஒன்றுக்கு 10 பேர் ஆக்ஸிடெண்ட்டிலே இறப்பது அன்றாட அலுவலாக இருக்குமோ என்னவோ . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறையிலே தள்ளிய விஷயத்தைப்பற்றி அவையிலே சொல்லக்கூடாது. இன்னும் ஒரு முறை சொல்கிறேன். அறையிலே தள்ளப்பட்ட விஷயத்தைப்பற்றி அவையிலே பேசக்கூடாது என்று விதிகள் சொல்கின்றன.

**திரு. ஏ. உமாநாத்:** தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நான் இங்கே ரெய்ஸ் பண்ண விரும்புவது என்னவென்றால், ஒரு உறுப்பினர் கால் அட்டென்ஷன் கொடுத்து, கனம் முதலமைச்சரவர்களும் பதில் அளித்தாகிவிட்டது. கால் அட்டென்ஷனில் குறிப்பாக ஒரு ப்ரபோசல் வைக்கப்பட்டிருக்கிறது. நேஷனலைஸ் செய்தல் என்பதைப்பற்றி கனம் முதலமைச்சரவர்கள் பதில் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, தேசியவுடைமையாக்குவது என்ற கொள்கையில் இந்த அரசு நிச்சயமாகப் பின்வாங்காது. அதை எந்தெந்த வகையிலே செயல்படுத்த முடியுமோ அதற்கு நாங்கள் முயற்சிப்போம் என்ற வகையில்தான் அந்த விளக்கம் தரப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஓ. சுப்பிரமணியன்:** ஆளுநர் உரையில் முதல் நாள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ற முறையில் சொல்கிறீர்களா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS